## நில அளவைச் சபை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளபடி நில அளவைச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

நில அளவைச் சபையின் 2006 ஏப்ரல் 02 ஆந் திகதிய எல்எஸ்சீ/சீஐஆர்/02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களினால் ஏதேனுமோர் காணித் துண்டின் உரித்தினை ஒப்படைப்பதற்காக அல்லது ஏதேனுமோர் எல்லையினை மாற்றுவதற்காக தயாரிக்கப்படுகின்ற் திட்டவரைபடத்தின் அல்லது நில அளவைப்படத்தின் உறுதிப்படுத்திய பிரதியொன்றை அத்திட்டவரைபடத்தினை உறுதிப்படுத்திய திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்களில் வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் படி, மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளினால் ரூபா 1,429,573 மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,050,797 ஆகும். முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 378,776 அல்லது 36 சதவீத முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது. நில அளவையாளர்களிற்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திர வருமானம் அதிகரித்தமை, நில அளவையாளர் பதிவு செய்தல் வருமானம் உயர்வடைந்தமை மற்றும் வங்கி வட்டி வருமான அதிகரிப்பு என்பன இவ்வளர்ச்சிக்கு காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

2002 இன் 17 ஆம் இலக்க அளவைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) 37(அ) பிரிவு**

நில அளவைக் கருமங்களில் ஈடுபட்டுள்ள நபர்களிற்கிடையே தொழில்சார் ஒழுக்கத்தினை பேணிச்செல்லல் சபையின் பிரதான நோக்கமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் தீர்ப்பதற்காக இருந்த அதிகாரமளிக்கப்படாத நபர்களினால் தயாரிக்கப்பட்ட அளவைத் திட்டவரைபடங்கள் மற்றும் நில அளவையாளர்களின் ஒழுங்கீனங்கள் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 88 ஆகும். அவற்றில் 70 முறைப்பாடுகளிற்காக தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் 18 முறைப்பாடுகளிற்கு தீர்வுகள் வழங்கப்பட வேண்டியிருந்தன.

**(ஆ) 37(இ) மற்றும் (உ) பிரிவுகள்**

2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 05 தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டில் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நில அளவைச் சபையினால் உண்மையாக 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமையும் எஞ்சிய 04 நிகழ்ச்சித்திட்டங்கள் நில அளவைகள் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தவை என்பதும் அவதானிக்கப்பட்டது.

**(இ) 37(ஊ) மற்றும் (எ) பிரிவுகள்**

நில அளவையாளர் தொழிலுடன் தொடர்புபட்ட தகைமையினை பெற்றுக்கொள்ளும் பரீட்சையை நடாத்தல், கல்வி, பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களில் சமத்துவத்தினை தாபிப்பதற்காக வெளிநாட்டு அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளல் என்பது நோக்காகக் காணப்பட்ட போதிலும் அவற்றை அடைந்து கொள்வதற்காக எவ்வித வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கா.அ.ம./5/501 ஆம் இலக்க கோவையின் படி அரசாங்க நிலங்கள் பொய்யான உறுதிகளினால் அரசுடமையிலிருந்து அகற்றப்பட்டமைக்கான குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்பட்ட அனுமதிபெற்ற நில அளவையாளர் ஒருவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையினை எடுக்குமாறு 2011 யூலை 03 ஆந் திகதிய அமைச்சுச் செயலாளரின் கடிதத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அந்த உத்தியோகத்தர் தொடர்பில் புலனாய்வினை மேற்கொள்வதற்கேனும் சபை தவறியிருந்தது. மேலும் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளரின் 2012 யூலை 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலமும் குற்றம் சாட்டப்பட்டுள்ள நில அளவையாளர் அரசாங்க காணிகளிற்காக தனிப்பட்ட திட்டவரைபடங்களைத் தயாரித்திருந்த சந்தர்ப்பமொன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

சுபையின் காசுப் புத்தகத்தினை கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தயாரிப்பதற்காக பொருத்தமான கணனி மென்பாகமொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 பதவியணி நிர்வாகம்**

---

**(அ)** நில அளவைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 04 ஆகும். அதாவது செயலாளர் பதவி – 01, கணனி தரவுப் பதிவாளர் / எழுதுவினைஞர் பதவி – 02 மற்றும் அலுவலக உதவியாளர் பதவி – 01 எனக் காட்டப்பட்ட போதிலும் கணக்குகள் விடயம் மற்றும் சபையின் நோக்கங்களிற்கும் கருமங்களிற்கும் உரித்தான சட்ட விடயங்கள் தொடர்பில் பதவி உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** சபையில் 2009 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற செயலாளர் பதவிக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2009 ஜனவரி மாதம் முதல் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நல் ஆளுகையும்**

---

**4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

நில அளவைச் சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டில் நில அளவையாளர்களைப் பதிவுசெய்தல் இலக்கு 100 எனக் காட்டப்பட்டிருப்பினும், 55 நில அளவையாளர்கள் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

2012 ஆம் ஆண்டில் சபைக்காக பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் செலவின மதிப்பீடொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

முன்றத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த நில அளவையாளர் ஒருவர் இரண்டு பெயர்களைப் பயன்படுத்தி திட்டவரைபட பிரதிகளைத் தயாரித்திருந்தமை தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் காரணமாக திட்டவரைபில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்பாடு நிராகரிக்கப்படுவதாகவும் அவ்வாறான திட்டவரைபுகளின் சட்டரீதியான தன்மை தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பிரச்சார நடவடிக்கைகள்